Crl.Misc.39

DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure.)
-------

IN THE COURT OF **JUDICIAL MAGISTRATE COURT, ARUPPUKOTTAI**.

| | | |
|---|---|---|
| Miscellaneous | :: | **CC 183/2025** |
| Deposition of witness for | :: | **PW. 3** |
| Name | :: | **அய்யரப்பன் (எ) அய்யப்பன்** |
| Father's Name | :: | **சூரப்ப நாயக்கர்** |
| Village | :: | |
| Taluk | :: | |
| Age | :: | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2026

---

**எதிரி ஆஜர் இல்லை. பிரிவு 355 BNSS வின் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்**
**21.07.2026**

**முதல் விசாரணை**:

1. நான் தற்போது பந்தல்குடியில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜர் ஆவணத்தில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையது தான். கடந்த 16.01.2025ம் தேதி அருப்புக்கோட்டைக்கு சென்றுவிட்டு நானும் எனது அண்ணன் ஜெயராஜும் பந்தல்குடி வழியாக சென்று கொண்டிருந்தபோது மாலை 06.30 மணியளவில் ஸ்டீல் கம்பெனி மற்றும் சௌடாம்பிகா கல்லூரி அருகே பந்தல்குடி காவல் நிலையத்திலிருந்து வந்த காவல் துறையினர் விபத்து வழக்கு சம்மந்தமாக இடத்தை பார்வையிட்டு வரைபடம் வரைந்து கொண்டிருந்தார்கள். அதற்கு சாட்சியாக நான் மேற்படி கையெழுத்தை செய்து கொடுத்தேன். அப்போது எனது அண்ணன் ஜெயராஜும் என்னுடன் இருந்தார். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள். **( பார்வை மகஜர் அசாஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. அருப்புக்கோட்டையில் இருந்து பந்தல்குடிக்கு நான் எவ்வாறு சென்றேன் என்றால் இருசக்கர வாகனத்தில் சென்றேன். நான் தான்

இருசக்கர வாகனத்தை ஓட்டி சென்றேன். என்னிடம் ஓட்டுநர் உரிமம் இருக்கிறதா என்றால் இருக்கிறது. எனக்கு சாலை விதிமுறைகள் தெரியும் என்றால் சரிதான். நான் பந்தல்குடிக்கு சென்று கொண்டிருந்த சமயத்தில் போலீசார் நிறுத்தியபோது எனது வாகனத்தை தேசிய நெடுஞ்சாலைக்கு கிழக்கு புற ஓரத்தில் நிறுத்தினேன் என்றால் சரிதான். நான் வாகனத்தை நிறுத்திய இடத்திற்கும் போலீசார் சம்பவ இடம் என்று வரைபடம் தயார் செய்த இடத்திற்கும் எவ்வளவு தொலைவு என்றால் நான் வாகனத்தை நிறுத்திய இடத்திலிருந்து கை நீட்டும் தூரத்தில் தான் வரைபடம் வரைந்தார்கள்.

2. நான் தேசிய நெடுஞ்சாலையை கடந்து சென்று சம்பவம் இடம் என்று குறிப்பிட்ட எதையும் பார்க்கவில்லை என்றால் சரிதான். வரைபடம் தயார் செய்த சமயத்தில் சம்பவ இடத்தில் நானும், எனது அண்ணன் ஜெயராஜும் இல்லை என்றாலும் போலீசார் கேட்டு கொண்டதற்கு இணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

**இல்லை**